# தென்கிழக்காசியாவில் இந்துப் பண்பாடு




தொகுப்பாசிரியர்கள்

பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா

ப. கணேசலிங்கம்



குமரன் புத்தக இல்லம்

கொழும்பு - சென்னை

2011

தென்கிழக்காசியாவில் இந்துப் பண்பாடு
தொகுப்பாசிரியர்கள்: பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா, ப. கணேசலிங்கம்
பதிப்புரிமை © 2011 (தொகுப்பு நூலுக்கு)
குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு 6, தொ.பே. 011 2364550, மி. அஞ்சல்: kumbhlk @gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-10

Hindu Culture in South East Asia
Edited By S.Krishnaraja & P. Ganeshalingam

First edition © 2011

Published by Kumaran Book House
39, 36th Lane, Colombo - 6, Tel. - 011 2364550, E.mail : kumbhlk@gmail.com
3 Meigai vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Printed by Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo - 6

வெளியீட்டு எண்: 480

ISBN 978-955- 659-293-1

அட்டையில் : கம்போடியாவில் உள்ள கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற ஆங்கோர்- வாட் கோயிலும் கி.பி. 879இல் கட்டப்பட்ட பிரேய்க்-கோ கோயிலில் உள்ள சிற்ப வேலைப்பாடும்.

# 1

# தென்கிழக்காசியாவில் பௌத்தம்


சாந்தினி அருளானந்தம்

ஆசிய நிலத்திணிவு கொண்ட தென்கிழக்காசிய நாடுகளுக்கு உன்னதமான ஓர் இடம் காணப்படுகின்றது. இந்நாடுகளின் அமைவிடத்தைப் பொறுத்து இவை இரண்டு பகுதிகளாக நோக்கப்படுகின்றன. ஆசிய நிலத் திணிவுடன் இணைந்த இந்தோசீன நாடுகள், நான்கு பக்கமும் சமுத்திரத்தால் சூழப்பட்ட தீவுக்கூட்டங்களை உள்ளடக்கிய இந்தோனேசிய நாடுகள் என்பனவே அவையாகும். இந்தோ-சீனப் பிரிவில் பர்மா, தாய்லாந்து, கம்போடியா, வியட்னாம், சிங்கப்பூர், மலாயா போன்ற நாடுகள் உள்ளடங்குகின்றன. தீவுக் கூட்டங்களில் சுமாத்திரா, யாவா, போர்ணியோ, இந்தோனேசியா, செலிபஸ், பிலிப்பைன்ஸ் தீவுகள் என்பன இடம்பெறுகின்றன. ஆரம்பத்திலே தென்கிழக்காசிய நாடுகள் தொடர்பான வரலாற்றினை இந்தியாவுடனும் சீனாவுடனும் தொடர்புபடுத்திப் பார்க்கின்ற மரபு காணப்பட்டது. எனினும் தற்காலத்தில் இம்மரபு மாற்றமடைந்து வருகின்ற தன்மையினை நாம் காணலாம். எது எவ்வாறிருப்பினும் இந்திய, சீன நாடுகள் தென்கிழக்காசியாவிலே ஏற்படுத்திய செல்வாக்கு மறுக்க முடியாத ஒன்றாகவே காணப்படுகின்றது என்பதை அங்கு இற்றைவரைக்கும் நிலை பெற்றிருக்கும் பல்வேறு பண்பாட்டு அம்சங்களும் எடுத்துக்காட்டுகின்றன.

பண்டைய காலத்தில் நடைபெற்ற வர்த்தக நடவடிக்கைகளில் இந்தியா முக்கியமான பங்கினை வகித்திருந்தது. இந்நாட்டுடன் வர்த்தகத் தொடர்புகள் கொண்ட நாடுகள் பலவும் வர்த்தக ரீதியாக

மட்டுமன்றி பண்பாட்டு ரீதியிலான தொடர்புகளையும் கொண்டிருந்தமை சிறப்பான அம்சமாகும். குறிப்பாக தென்கிழக்காசிய நாடுகளுடனான வர்த்தகத் தொடர்புகள், இந்தியாவின் செல்வாக்கு அந் நாடுகளின் பண்பாட்டு வரலாற்றில் கணிசமான அளவில் பங்களிப்புச் செய்துள்ளதை அறிஞர்கள் சுட்டிக்காட்டுவர். இதனை உறுதிப் படுத்தப் பல்வேறு சான்றுகளும் காணப்படுகின்றன.[1] சிறப்பாக வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியர்கள் காலப்போக்கில் இங்கு நிரந்தரமாகக் குடியேற முற்பட்டனர். அத்துடன் இவர்கள் சுதேச மக்களுடன் திருமணத் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொண்டனர். மேலும் அரசியல் சமயத் தொடர்களும் இந்திய - தென்கிழக்காசிய உறவுகளுக்கும் பண்பாட்டு பரிமாற்றங்களுக்கும் வழிவகுத்திருந்தன. இதன் பின்னணியிலே தாம் குடியேறிய இடங்களில் தம்முடைய சமயம், மொழி, கலை போன்றவற்றை வளர்க்க முற்பட்டதனை நாம் கண்டு கொள்ளலாம். இவற்றிலே சமயமானது பிரதானமான ஒரு இடத்தினை வகித்திருந்தமை நோக்கத்தக்கதாகும். இந்தியப்பண்பாடு தென்கிழக்காசியாவில் சமயம், மொழி, கலை, தத்துவங்கள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றினூடாக நிலை பெற்றிருப்பதனை அவதானிக்கலாம். வங்காள விரிகுடாவைத் தாண்டி இந்து அரசுகள் கூட இங்கு தோற்றம் பெற்றிருந்ததெனின் இந்தியப்பண்பாட்டுப் பரவலின் வலுவினை நாம் விளங்கிக் கொள்ள இயலும். அண்மைக்காலங்களில் தென் கிழக்காசிய நாடுகளில் சுதேசிய அம்சங்களின் தனித்துவத்தை முதன்மைப்படுத்தும் நிலையை அவதானிக்கின்ற போதிலும் அவற்றின் ஆரம்பகால வரலாற்றில் இந்தியப் பண்பாடு தென்கிழக்கிலுள்ள தீபகற்பம் மற்றும் தீவுக் கூட்டங்களில் பெரியளவான செல்வாக்கினை நிலைநிறுத்திக் கொண்டமைக்குத் தொல்லியற் சான்றுகள் கிடைக்கப் பெறுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

பண்பாடென்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஒரு உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கவழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும் எனக் குறிப்பிடப்படுகின்றது.[2] பொதுவாக ஒரு மக்கள் கூட்டம் தமக்கெனத் தனித்துவமான வாழ்வியல் ஒழுங்கினைக் கொண்டிருக்கின்ற அதேவேளை அவ்



வாழ்வியல் ஒழுங்கினூடாக அம்மக்களை அடையாளப்படுத்த முடியுமெனில் அது அவர்களின் பண்பாட்டு வாழ்க்கையாக அடையாளப்படுத்தப்படலாம். அவ்வாறான பண்பாட்டில் குறிப்பட்ட சில அம்சங்கள் பலமற்றிருக்கும் போது பிறிதொரு பண்பாட்டின் சில கூறுகள் ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளதை வரலாறு எமக்குணர்த்துகின்றது. பண்பாட்டு அம்சங்கள் தம்மகத்தே மொழி, சமயம், கலை, தத்துவங்கள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் போன்ற கூறுகளைக் கொண்டிருப்பதைக் அவதானிக்க முடிகின்றது. தென்கிழக்காசியாவைப் பொறுத்தவரை இவற்றில் ஒன்றோ அன்றில் பலவோ பிறிதொரு பண்பாட்டின் செல்வாக்கிற்கு உட்படக் கூடிய நிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய மயமாக்கம்

தென்கிழக்காசிய நாடுகளின் சுதேசியப் பண்பாட்டில் புராதன மத்திய கால கட்டத்தில் இந்தியாவின் இந்து, பௌத்தம் போன்ற சமயங்களின் செல்வாக்கு ஏற்பட்டிருந்ததைச் சான்றுகள் அறியத் தருகின்றன.

இந்நாடுகளில் சிலவற்றில் இந்து சமயமும் சிலவற்றில் பௌத்த சமயமும், இன்னும் சிலவிடங்களில் அச்சமயங்கள் சுதேச சமய அம்சங்களோடு கலப்புற்றுள்ளதையும் அவதானிக்கலாம். சிறப்பான அம்சம் யாதெனில் இந்து சமயத்தின் கொள்கைகளிலிருந்து விலகி பௌத்த சமயம் வளர்ந்ததாயினும் தென்கிழக்காசியாவில் அவை சில சந்தர்ப்பங்களில் ஒன்றிணைந்த தன்மையினையும் காணலாம். தென்கிழக்காசிய நாடுகள் சிலவற்றில் தன்னை நிலைப்படுத்திக் கொண்ட பௌத்தப் பண்பாட்டின் செல்வாக்கினை அறிந்து கொள் வதற்கு அங்கு காணப்பெறும் ஆரம்பகால பௌத்தக் கோயில்கள், விகாரைகள், அவற்றிலும் பிற இடங்களிலும் கிடைத்த சிற்பங்கள், ஓவியங்கள், பௌத்த இலக்கியங்கள், யாத்திரிகரின் குறிப்புக்கள், கல்வெட்டுக்கள் போன்ற இன்னோரன்ன சான்றுகள் துணையா கின்றன. ஆயினும் இந்தியப் பண்பாட்டு ஆய்வாளர்கள் இந்தியப் பண்பாட்டினை இந்துப் பண்பாட்டின் முக்கிய கூறாக முதன்மைப் படுத்துகின்ற அளவுக்கு பௌத்தப் பண்பாட்டினை முதன்மைப்படுத்த வில்லை எனலாம். ‘இந்தியக் கலாசாரம் தென்கிழக்காசியாவுக்குப் பரவியது. ஆனால் அது பௌத்தமதத்தின் மூலம் பரவவில்லை. பர்மா நீங்கலாக அது பெரும்பாலும் பிராமணீயச் சமயக் கோட் பாட்டின் மூலமே பரவியது’[3] போன்ற கருத்துக்களே பொதுவாக முன் வைக்கப்பட்டிருந்தன. இது பற்றிக் கிருஷ்ணராஜா பின்வருமாறு கூறுகின்றார்:

> இந்தியமயமாக்கம் என்ற கருத்தினை இந்துப் பண்பாட்டி னூடாகவே காண முனைகின்ற ஒரு பண்பினை இந்தியப் பண் பாட்டு வரலாற்றாசிரியர்களிடத்து காணமுடிகின்றது. பௌத்த பாரம்பரியமொன்று வாழ்க்கை முறையாக ஆசியாவின் பல முனைகளிலும் தாக்கத்தினைச் செலுத்தியிருந்தும் கூட அதனூடாக இந்தியமயமாக்கம் என்ற கோட்பாட்டினை நிறுவு வதற்கு அவர்கள் ஒப்பவில்லை.[4]

இப்பின்னணியிலேயே இந்துக் குடியேற்ற நாடுகள், பரந்த இந்தியா போன்ற சொற்பதங்கள் முன்வைக்கப்படுகின்றன. பி.என். போஸ் (P.N. Bose) அந் நாடுளை ‘இந்தியாவின் புதல்வர்கள்’ என்று குறிப்பிட்ட நிலையில் நீலகண்டசாஸ்திரி கிரேக்கர்கள் குடியேற்ற நாடுகளில்

தம்முடைய கிரேக்கப் பண்பாட்டினைப் பரப்பியதனைப் போன்று ஆரம்ப காலங்களில் இந்தியாவிலிருந்து குடியேறியவர்கள் தமது பண்பாட்டினை அங்கும் அறிமுகப்படுத்தினர் எனக் குறிப்பிடுகின்றார்.[5] பொதுவாக இந்திய அறிஞர்கள் இந்தியச் செல்வாக்கினால் ஏற்பட்ட மாற்றத்தினை இந்தியமயமாக்கம் என்ற பெயராற் சுட்டினர். இது தென்கிழக்காசிய நாடுகள் மீதான அரசியல் ரீதியான காலனித்துவச் செல்வாக்காகவன்றி பண்பாட்டு ரீதியான செல்வாக்காகவே வலியுறுத்தப்படுவது கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். இவ்வாறான பின்னணியில் எடுத்துக்காட்டப் படும் இந்திய மயமாக்கத்தின் ஒரு கூறாக பௌத்தமும் அமைந்து கொண்டமையை நிறுவுவதற்குப் பல சான்றுகள் கிடைக்கப் பெறுகின்றன. இந்நாடுகளில் சிலபகுதிகளில் இன்றும் பிரதான சமயமாக பௌத்தம் நிலை பெற்றுள்ளமை எடுத்துக்காட்டத்தக்க தாகும். இங்கு பௌத்தசமயம் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அதன் வரையறைகள், தர்மக்கோட்பாடுகள், கலையம்சங்கள், பழக்கவழக்கங்கள் என்பனவும் செல்வாக்குப் பெறத் தொடங்கின. இவ்வாறான நடவடிக்கைகள் அக்கால மக்களின் வாழ்வியல் முறையிலே ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தின என்றால் அது மிகையாகாது. பௌத்த மதத்தின் நிறுவன மயப்படுத்தப்பட்ட தன்மை மக்களின் எண்ணங்களிலே புதிய மாறுதல்களை ஏற்படுத்தியது.

## பௌத்தத்தின் பரவல்

மௌரியப் பேரரசனான அசோகனால் இந்தியா முழுவதும் பௌத்தமானது பரப்பப்பட்டது. அதுமட்டுமன்றி இதே காலப் பகுதியிலே அவன் வெளிநாடுகளுக்கும் தேரவாத பௌத்த மதத்தினை பரப்புவதற்கு விருப்பம் கொண்டான். அந்த வகையில் தென்கிழக்காசிய நாடுகளிலே பௌத்தத்தினைப் பரப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சமகாலத்திலே இங்கு நிலவிய சுதேசசமயங்கள் கட்டுக்கோப்பற்ற முறையிலே நிறுவனமயப்படுத்தப்படாத தன்மை உடையனவாகக் காணப்பட்டன. இத்தகைய சாதகமான நிலையில் மகாமாத்திரர் என்ற குழுவில் அங்கத்துவம் பெற்றிருந்த பௌத்த குருமார்கள் அடங்கிய குழுக்கள் தென்கிழக்காசிய நாடுகளுக்கு

அனுப்பப்பட்டனர். குறிப்பாக அசோகனுடைய ஆட்சிக் காலத்தில் சோனா , உத்தர என்ற இரு பிக்குகள் கீழைப்பர்மாவுக்கு சென்றதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது.[6] இங்கிருந்தும் தென்கிழக்காசியாவின் பிற நாடுகளான தாய்லாந்து, கம்போடியா, யாவா போன்ற நாடுகளுக்கு பௌத்த தர்மக் கோட்பாடுகள் பரவலடைந்தன. மக்களும் இக்கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டதனால் விரைவிலேயே இந்நாடுகளில் பௌத்தமானது செல்வாக்குப் பெற்ற ஒரு சமயமாக விளங்கியது. இதனால் அதிகளவான இந்தியாவின் பண்பாட்டு அம்சங்கள் பௌத்தத்தின் ஊடாகவும் இந்நாடுகளில் நிலைபெறத் தொடங்கியதைக் காணலாம். சிறப்பாக பகோடாக்கள் எனப்பட்ட புத்தமதக் கோயில்கள் பலவும் கட்டப்பட்டன. அத்தோடு அறிமுகமான சிற்பக்கலையின் வளர்ச்சியால் புத்தரின் உருவச்சிலைகள் பலவும் செதுக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டன.

பௌத்தம் மன்னர்களின் ஆதரவு பெற்று அரசசமயமாக வளர்ச்சி பெற்றமையால் பகோடாக்கள் உள்ளிட்ட பௌத்தக்கலைகள், அது சார்ந்த பண்பாடுகள் போன்றன அரசியல் வாழ்விலும் வளத்திலும் முக்கிய இடத்தினைப் பெற்றுக்கொண்டன. அதுமட்டுமன்றி இந்திய - தென் கிழக்காசிய - இலங்கை இடையே பௌத்த அறிவியல் சார்த் தொடர்புகளும் இருந்துள்ளன. சிறப்பாகக் கூறுவதானால் இம் மூன்று நாட்டுப் பிக்குகளும் அவ்வவ் நாடுகளிலுள்ள புனித மையங்களுக்குச் செல்வதும் , பௌத்தக் கல்வி மையங்களில் கல்வி கற்பதும், நூல்கள் ஆக்குவது, பௌத்த சமய, மற்றும் பாளி இலக்கியங்களை மொழி பெயர்ப்பது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மூன்று நாடுகளுக்கிடையேயும் பௌத்தசமய அடிப்படையிலான முக்கோணத் தொடர்புகள் இருந்தமையினை அவதானிக்கலாம்.

பௌத்த சமயத்திலும் ஏனைய சமயங்களைப் போன்று பல பிரிவுகள் காணப்படுகின்றன. இந்தியாவில் பௌத்த சமயத்தில் 18 பிரிவுகள் முதன்மைப்படுத்தப்படுகின்றது. ஆயினும் இலங்கையிலும் தென்கிழக்காசிய நாடுகளிலும் தேரவாதம், மகாஜானம் என்ற பிரிவுகளே செல்வாக்குச் செலுத்தியதைக் காணலாம். குறிப்பாகத் தென்கிழக்காசிய நாடுகளில் இவை ஒன்றை ஒன்று முரணியும் அரவணைத்தும் வளர்ந்ததை காணலாம்.தேரவாதப் பிரிவு தாய்லாந்து, கம்போடியா, பர்மா ,லாவோஸ் போன்றவற்றிலும் மகாஜானப்பிரிவு

மலேசியா, புருனே, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா போன்ற இடங்களிலும் சிறப்புற்றிருந்தன. சுமாத்திராத் தீவில் ஸ்தாபிக்கப் பட்டிருந்த சிறி விஜய அரசு சைலேந்திர மன்னர்களால் ஆளப்பட்ட பொழுது மகாஜான பௌத்தம் அவர்களால் ஆதரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இக்காலகட்டத்தில் பௌத்தகலை மரபுகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. கி.பி.12ஆம் நூற்றாண்டில் செல்வாக்குப் பெற்றருந்த கலை மரபுகள் மகாஜான பௌத்தத்தின் பின்னணியில் வளர்ச்சியடைந்தது. சைலேந்திர மன்னர்கள் தென்கிழக்காசியாவிலும் செல்வாக்குப் பெற்றிருந்ததோடு தமிழ்நாட்டின் சோழர்களோடும் வங்காளத்தை ஆண்டபாலவம்ச மன்னர்களோடும் தெரடர்புகளைக் கொண்டிருந்ததை அவதானிக்கலாம்.

## இலங்கையுடனான பௌத்த சமயத் தொடர்பு

தென்கிழக்காசியாவின் ஆரம்பகால பௌத்தம் இந்தியாவிலிருந்து பரப்பப்பட்டாலும் கி.பி.1ஆம் நூற்றாண்டிலிருந்து அந்நாடுகள் இலங்கையை பௌத்த மதத்தின் தலைமையகமாக கொண்டு செயற் பட்டதைக் அவதானிக்கலாம்.[7] இலங்கையின் எழுதப்பட்ட திரிபிட கங்கள் உள்ளிட்ட பௌத்தப் பாளி மற்றும் மகாயான பௌத்தத்திற் குரிய சமஸ்கிருத நூல்கள் அந்நாடுகளில் சிறப்பாகப் பேணப்பட்டன. பாளியில் எழுதப்பட்ட திரிபீடகங்களின் ஒரு பகுதி இலங்கையி லிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது.[8] ஆனாலும் அவ்விருநாடுகளி டையேயான உறவுகள் இருபக்க உறவுகளாக அமைந்தமையை அவதானிக்கலாம். லினி (lini) என அழைக்கப்பட்ட சம்பாவில் இலங்கையிலிருந்து புத்த கோசரினால் பௌத்த சமயம் பரப்பப்பட்ட தாகக் கூறப்படுகின்றது.[9] பர்மாவில் பீபிங்யோவிங் விகாரைகளின் கட்டிடக்கலையினைப் பின்பற்றியே இலங்கையின் சைத்திய அமைப்பு முறை அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. தீபவம்சம், மகாவம்சம், வம்சத்தபிரகாசினி போன்ற நூல்களை எழுதுவதில் பர்மிய எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன.[10] இவற்றோடு ஈழத்தின் வடபகுதியில் உள்ள நாகதீபம் பற்றிய குறிப்புக்களும் காணப்படு கின்றன.

பர்மா - இலங்கை இடையேயான பௌத்த சமயத்தொடர்புகளின் பின்னணியில் அங்கு செல்வாக்குப் பெற்றிருந்த மொன் குடும்பத் தினுடைய அரசியல், சமூகப்பணிகள் இலங்கையில் விரிவாக்கம் பெற்றதாகக் கூறப்படுகின்றது.[11] 1ஆம் விஜயபாகு, 1ஆம் பாரக்கிரமபாகு ஆகிய மன்னர்களுடைய காலங்களில் இலங்கைக்கும் தென்கிழக்காசி யாவுக்கும் இடையேயான உறவுகள் இருபக்க உறவுகளாக ஏற்பட்டிருந் தாலும் பௌத்தமத ரீயிலான உறவுகள் பலம் வாய்ந்தவையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

**தென்னிந்தியாவுடனான தொடர்புகள்**

தமிழ்நாட்டில் எழுந்த இலக்கியமான மணிமேகலை முதலான தமிழ் பௌத்த காப்பியங்களில் யாவா, சாவகம், சாகவத்தீவகம் போன்றன பௌத்தசமயத்தோடு தொடர்புபடுத்திக் குறிப்பிடப்படுவதை காணலாம். மேலும் தென்னிந்திய அமராவதி, காந்தாரம் போன்ற இடங்களின் செல்வாக்கால் பௌத்த சமயம் குறிப்பாகக் பௌத்தக் கலை புதிய பரிணாமத்தைப் பெற்றுக் கொண்டமையும் கவனிக் கத்தக்கது. இவற்றோடு ஈழத்தின் வடபகுதியில் உள்ள நாகதீபம் பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன. பௌத்தமதத் தொடர்பின் பின்னணியிலேயே இவ்விடங்கள் குறிப்பிடப்படுகின்றன.

பௌத்தசமயத்தின் செல்வாக்கு தென்கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்டதுமன்றி அவற்றுட் சில பிற்காலத்தில் பௌத்த நாடுகளாகவே மாற்றமடைந்தமையை அவதானிக்கலாம். தென்னிந்தியாவில் ஆட்சி செய்த பேரரச வம்சமான சோழருக்கும் சைலேந்திர மன்னர்களுக்கு மிடையே ஆரம்ப காலகட்டத்தில் சமய ரீதிலான தொடர்புகள் இருந்தன. சைலேந்திரமன்னன் விஜயோத்துங்கவர்மர் தென்னிந்தியப் பேரரசனாக விளங்கிய 1ஆம் இராஜராஜ சோழனிடம் கி.பி. 1007 இல் தமிழ்நாட்டில் நாகபட்டினத்தில் ஒரு பௌத்த விகாரை கட்டுவதற்கு அனுமதி கேட்டான். இந்த விகாரத்திற்கு ஆனைமங்கலம் உள்ளிட்ட 24 கிராமங்கள் முற்றூட்டாக, பள்ளிச்சந்தமாக எழுதி வைக்கப்பட்டன.[12] ஆனால் 1ஆம் இராஜேந்திரனுடைய காலத்தில் இவ் வுறவுகளில் மாற்றம் ஏற்பட்டமையைக் காணலாம். இராஜேந்திர சோழன் தென்கிழக்காசிய நாடுகள் மீது குறிப்பாக சைலேந்திரரின்

ஆட்சிக்குட்பட்ட கடாரத்திற்குப் படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றதை அவனது மெய்க்கீர்த்திகள் எடுத்துக்காட்டுகின்றன. சைலேந்திரப் பேரரசில் தெற்கிலுள்ள தீவுகள் மட்டுமன்றி மலேயா, யாவா, கம்போடியா போன்றனவும் இணைக்கப்பட்டிருந்தமையால் அந்நாடுகளிலும் பௌத்த சமயத்தின் செல்வாக்கு ஏற்பட்டதுமன்றி அவற்றுட் சில பிற்காலத்தில் பௌத்த நாடுகளாகவே மாற்றமடைந் தமையை அவதானிக்கலாம். தென்கிழக்காசியாவில் உள்ளடங்குகின்ற குறிப்பிட்ட ஒரு சில நாடுகளில் ஏற்பட்ட பௌத்தத்தின் செல் வாக்கினை கீழே நோக்கலாம்.

**பர்மா**

தென்கிழக்காசியாவிலே பௌத்த மதமானது சிறப்பாக நிலை பெற்ற ஒரு நாடாக நாம் பர்மாவைக் குறிப்பிடலாம். இதனுடைய பிரதான நகராகப் பாகன் (Pagan) விளங்கியது. இன்று மியன்மார் என்று அழைக்கப்படும் இந்நாடானது பௌத்த மதத்தின் மைய ஸ்தானமாக விளங்குவதனை நாம் காணலாம். ஆரம்பகால கிறிஸ்தவ சகாப்தத்தில் பௌத்தசமயம் பரவலான செல்வாக்கினைப் பெற்றுக் கொண்டது. பாளி மொழியில் அமைந்த பௌத்த இலக்கியங்களைத் தன்னுடன் எடுத்துச் சென்ற புத்த கோஷர் கி.பி 5ஆம் நூற்றாண்டில் அச்சமயத்தை அங்கு பரப்புரை செய்தமையை அறியமுடிகின்றது.[13] பின்னைய நூற்றாண்டுகளில் வட பர்மாவில் வஜ்ஜிராயன பௌத்தம் அறிமுக மாகியது. இங்கு இந்து சமயத்தினதும் சுதேச நாட்டார் வழிபாட்டுடனும் இணைந்த வகையில் பௌத்தம் செல்வாக்குப் பெற்றமையைக் காணலாம்.[14] இந்நாட்டில் ஆரம்பத்தில் இந்துசமயம் பின்பற்றப்பட்டு வந்தது. கி.பி 11ஆம் நூற்றாண்டளவில் அனுத்ரதன் என்னும் மன்னன் பர்மிய நாட்டினை ஒன்றுபடுத்தி, பிற சமயம் சார்ந்த அம்சங்களைக் மிகக் கடுமையாக அடக்கி தேரவாத பௌத்தத்தினை நிலை நாட்டினான்.[15] இவன் பௌத்தசமயம் சார்ந்த புனித சின்னங்களைப் பேணுவதிலும், அச்சமயம் சார்ந்த இலக்கியங்களைச் சேகரிப்பதிலும் இம்மன்னன் அதித அக்கறை காட்டினான். இம் மன்னனுடைய காலத்தில் பௌத்தசமயம் அரச சமயமாக கொண்டு வரப்பட்டதை யடுத்து பர்மா ஒரு பௌத்த நாடாக மாறுவதற்கு வழிவகுக்கப்பட்ட தெனலாம்.

இங்கு காணப்படும் பௌத்த மதப் கோயில்களான பகோடாக்கள் பௌத்தரின் சிறப்பினையும் உறுதிப்பாட்டினையும் வெளிப்படுத் துவனவாக உள்ளன. அங்கு ஒவ்வொரு கிராமத்திலும் பகோடாக்கள் அமைக்கப்பட்டிருப்பதானது பர்மியர்கள் பௌத்தமதத்தின் மீது கொண்டிருக்கும் அபிமானத்தைக் காட்டுவதாகவுள்ளது. பர்மாவின் தலைநகரான ரன்கூனிலுள்ள புத்தரின் தலைமுடி வைத்துக் கட்டப் பட்ட ஸ்வீடகான் பகோடா உலகின் மிகப் பெரிய பௌத்தகோயிலாகப் போற்றப்படுகின்றது. பகோடாவின் மேல் காணப்படும் தங்க கோபுரம் சிறப்பு வாய்ந்ததாகும். உலகில் வேறெங்கும் இது போல இல்லை என கிப்பளிங் என்ற அறிஞர் கூறுகின்றார். இந்த பகோடாவைச் சூழக் காணப்படும் சுமார் 500 தங்கத் தூபங்கள் புத்தரைப் பின்பற்றிய சிறப்பு வாய்ந்த சீடர்களைச் சுட்டுவதாக அமைக்கப்பட்டுள்ளன.[16] இது ரன்கூன் நகரின் ஆத்மா எனச் சிறப்பிக்கப்படுகின்றது.

பர்மிய நாட்டில் காணப்படும் பௌத்தம் சார்ந்த கட்டிடக்கலையை அவதானிக்கின்றபோது அந்நாடு பல நாடுகளின் கலைக் கூறுகளை உள்வாங்கியிருப்பதனை அவதானிக்கலாம். பாகனில் உள்ள மகா போதியானது புத்தகாயாவிலுள்ள புனிததலத்தைப் பிரதியாகக் கொண்டிருப்பதை அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.[17] கென்யா ஏரிக்கு வடக்கே சற்றுத் தொலைவில் கபாஆயி பகோடா உள்ளது. இது உலக அமைதிக்காக கட்டப்பட்டது எனக் கூறப்படுகின்றது. இதனை விட இங்குள்ள மகாமாஸன குகா என்ற என்ற ஒரு குகையிலே புத்தரின் நினைவு விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. பழைய கால பெரு நகரிலே மாபெரும் சயனநிலை புத்தர் சிலை ஒன்று உள்ளது. இது 180 அடி நீளமானது. இங்கு ஆட்சி செய்த ஸின்ஸாடி என்ற அரசியின் காலத்திலே தர்மஸேடி, தர்மபாரா என்ற இரண்டு பௌத்த குருமார்கள் தென்னிந்தியாவிலிருந்து பர்மா வந்தனர். அரசி இவர்களில் ஒருவரை மன்னனாக்கியதன் பின்னர் தான் பௌத்த மதத்திற்கு மாறித் துறவு வாழ்க்கை வாழ்ந்ததாக கூறப்படுகின்றது.

சற்று பிற்பட்ட காலத்திலே பர்மியப் பேரரசிற்கு ஆபத்து ஏற்பட்ட காலத்திலே பௌத்த சமயத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டமையால் தர்மகோடி மன்னன் 22 பிக்குகளை இலங்கைக்கு அனுப்பி பௌத்த மதம் பற்றிய வேதங்களைப் பயின்று வருவதற்காக தூதனுப்பினான். இலங்கையின் கல்யாணி நதிக்கரையிலுள்ள ஒரு பழம் பெரும்

கோயிலின் மடத்தில் இவர்கள் வேதங்களைப் பயின்றனர். பின் நாடு திரும்பி பௌத்த மதத்தினைப் பரப்பினர். இதன் ஞாபகார்த்தமாக தர்மகோடி மன்னன் கல்யாணிஸிமா என்ற ஒரு பெரிய பௌத்த மடத்தினை அமைத்தான். இதற்கு அருகே உள்ள ஒரு பாதையில் எவ்வாறு பௌத்த மதம் பரவியது என்ற செய்தி சிற்பமாகச் செதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

இதைவிட பெரு நகரில் இருந்து 4 கி.மீ. தொலைவிலே காணப் படுகின்ற காயக்பன் பகோடா சிறப்பு வாய்ந்ததாகும் இது 147 அடிமேல் தர்மகோடி மன்னனால் கட்டப்பட்டது. இங்கு 98 அடி உயரமான 4 புத்தர் சிலைகள் காணப்படுகின்றன. மேலும் திஸ்ஸா என்ற மன்னன் மலைகள் மீது வியக்கத்தக்க கோயில்களைக் கட்டினான் என்று கூறப்படுகின்றது. இவற்றின் அருகே மூங்கில் காடுகள் காணப்படு கின்றன. இத்துடன் இளைப்பாறும் இடங்கள், தெளிவான நீரூற்றுகள், சிறுசிறு குடியிருப்புகள் என்பனவும் இங்கே காணப்படுகின்றன. இவை கோயிலின் சிறப்பை மேலும் மெருகூட்டுகின்றன. மேல் பர்மாவின் தலைநகரான மாண்டலே பௌத்த கலாசார மையமாக தென்கிழக்காசியாவிலே போற்றப்படுகின்றது. கௌதம புத்தர் தன் சீடருடன் மண்டலே மலைக்கு வந்து போனார் எனக் கூறப்படுகின்றது. இங்கு ஒரு பௌத்த நிலையத்தினை தொடங்கவும் ஒரு பௌத்தப் பள்ளியினை நிறுவவும் எண்ணினார் என்றும் அதனை மன்னன் நிறைவேற்றியதாகவும் அறியப்படுகின்றது. இவனால் தங்க நகரம் என்ற பெயரிலே ஒரு மாளிகையும் அமைக்கப்பட்டது. மாண்டலே நகருக்கு தெற்கே 3 கி.மீ. தொலைவிலே மகதா முனி என்ற ஒரு பகோடாவும் அமைந்துள்ளது. இன்று வரை பர்மாவின் புனித இடமாக ஸகாயில் கருதப்படுகின்றது. பௌத்தமத நம்பிக்கைகள் வாழும் இடமாக இது கூறப்படுகின்றது. எந்தப்புரட்சியும் இந்த நகரினது சமயத்தினைப் பாதிக்கவில்லை. இந்நகர் 600 பௌத்த மடங்களை உள்ளடக்கியுள்ளது. மேலும் 5600 க்கு மேற்பட்ட பௌத்த குருமார்கள் இங்கு வசிக்கின்றனர்.

## தாய்லாந்து

தாய்லாந்திலும் பௌத்தின் ஒரு பிரிவான தேரவாத பௌத்தம் முக்கிய மான இடத்தினைப் பெற்றிருந்ததைச் சான்றுகள் எடுத்துக் காட்டு கின்றன. இதற்கு ஆதரவளித்த தாய் மன்னனாகிய ராம் ஹாம்- ஹெங் பௌத்த துறவிகளைத் தலைநகரான சுகோதைக்கு கல்வி கற்பதற்காக வரவழைத்தான்.[18] இலங்கையுடனும் சமய உறவுகளைப் பேணிய இம்மன்னன் விகாரைச் சமூகத்தினருக்காக நிர்வாகத்தினைக் கவனிப்பதற்காக பாரம்பரியமாக ஒரு சங்கபிரதானியை (sangha chief) நியமித்தான்.[19] ஏறத்தாழ அரை நூற்றாண்டுகள் அரசாட்சியாளனாக இருந்த லூதை (Luthai) என்பவன் பௌத்தத்திற்குப் பெரிய ஆதரவை வழங்கியதுமன்றி, அதன் அடிப்படையில் தாய் பாரம்பரியம் உருவாவதற்கும் வழிவகுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக முதலாவது தர்மராயன் என்ற மன்னன் காலத்தில் சுமண என்ற பௌத்த துறவிப் பக்தர்களுடன் இலங்கையிலிருந்து புறப்பட்டு தாய்லாந்து சென்று அங்கு மதம் பரப்பும் நடவடிக்கைகளில் ஈடு பட்டதாக கூறப்படுகிறது. இதனை சிங்கள கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன. மேலும் தர்மராயன் தென்கிழக்காசியா நோக்கிய பௌத்தம் பரம்பலில் அதிக அக்கறை கொண்டிருந்தான் என்றும் கூறப்படுகிறது. தென்கிழக்காசியாவுடன் இலங்கை கொண்டிருந்த பௌத்தமதம் தொடர்பானசெல்வாக்கினை பாளி இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம். இலங்கையிலே எழுதப்பட்ட பாளி நூல்கள் இந்த நாடுகளிலே அதிகம் பேணப்பட்டன. தீபவம்சம், மகாவம்சம், வம்சத்தபகாசினி உள்ளிட்ட பல நூல்களை எழுதுவதற்கு பர்மிய எழுத்துக்கள் உதவியிருந்தன. விஸ்து ருத்த மகாவம்ச என்ற நூலானது கம்போடிய எழுத்துக்களை மாத்திரம் உபயோகித்து எழுதப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கம்போடியா

இங்கு நிலவிய பௌத்த பண்பாடு பற்றி தொல்லியற் சான்றுகள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். சிறப்பாக தாய்லாந்திலே கண்டறி யப்பட்ட புத்தர் சிலைகள் மற்றும் சிற்பங்கள் இதற்கு சிறந்த உதாரண மாகும். புத்தரின் பல நிலைகளிலே காணப்படும் சிற்பங்கள் பௌத்த

மதக் கோயில்கள், வழிபாடு பொருட்கள், சமய ரீதியிலான கட்டிடங்கள் என்பனவும் இங்கு பௌத்த பண்பாடு நிலை பெற்றிருந்த தன்மை யினை எடுத்து காட்டுகின்றன.

கி. பி 4ஆம் நூற்றாண்டளவில் இந்தியாவின் பண்பாடு இங்கு பரவிய போது இந்துசமயம் பிரதான இடத்தைப் பெற்றுக் கொண்டாலும் அடுத்து வந்த இரண்டு நூற்றாண்டுகளின் பின்பு ஆட்சியாளர் இந்து சமயத்தவராக இருந்தாலும் பௌத்தத்திற்கு ஆதரவளிப்போராகவே விளங்கினர். இங்கு மகாயான பௌத்தமே செல்வாக்குப் பெற்றிருந்தது. இந்த பௌத்தப் பிரிவானது இந்து சமயத்தன் சில அம்சங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கி.பி.7ஆம் நூற்றாண்டளவில் மிகக் கடுமையாக அடக்கப்பட்ட இப்பௌத்த சமயம் 9ஆம் நூற்றாண்டளவில் மீண்டும் அரச ஆதரவினைப் பெற்றுக் கொண்டது. 7ஆம் ஜெயவர்மன் காலத்தில் மகாயான பௌத்தம் முதன்மை பெற்றதுமன்றி அரச சமயமாகவும் ஏற்றம் பெற்றது. இவனுடைய காலத்தில் அங்கோர்வாட் என்ற நகரம் அமைக்கப்பட்டு அதன் மத்தியில் பயான் (Bayon) கோயிலும் நிறுவப்பட்டது. அங்கோர் வாட் ஆலயம் 2ஆம் சூரியவர்மன் என்பவனால் கட்ட ஆரம்பிக்கப் பட்டதாகக் கூறப்படுகின்றது.[20] பிரமாண்டமாக அமைக்கப்பட்ட கோபுரத்தில் நான்கு மனித முகங்கள் செதுக்கப்பட்டுள்ளது. அதனைச் சுற்றி அமைக்கப்பட்ட கோபுரங்களிலும் இவ் வேலைப்பாடு இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த முகங்கள் அரசன் ‘புத்த அரசன்’ என்பதை உணர்த்துவதாக வர்ணிக்கப்படுகின்றது.

**யாவா**

யாவாவில் கி.பி.5ஆம் நூற்றாண்டளவில் இந்துமதம் சிறப்புற்றிருந் தமையினை பாகியனின் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. ஆனால் காஷ்மீரத்தில் இருந்து வந்த குணவர்மனின் முயற்சிகளால் அத்தீவின் பெரும்பகுதிகளில் பௌத்த சமயம் நிலைநாட்டப்பட்டது. யாவாவின் மத்திய மையமாக விளங்கும் கெடாவில் கி.பி. 8ஆம் 9ஆம் நூற்றாண் டளவில் சைலேந்திரர் வம்ச ஆட்சியில் பெரபதூர் நகர் ஸ்தாபிக்கப் பட்டது.[21] பெரபதூர் என்பது பல புத்தர்கள் என்ற பொருளில் சிறப்பாக அத்தீவின் உள்ளூர் வழக்கில் ‘ பரபுத்தர்’ என்ற கருத்தினை

அடிப்படையாகக் கொண்டதாக எடுத்துக்காட்டப்படுகின்றது.[22] பௌத்தத்தில்ஆழமான விசுவாசத்தைக் கொண்ட இதன் ஆட்சி யாளர்கள் நின்று நிலைக்கக் கூடிய அற்புதமான கலைப்படைப்புக் களை வழங்கினர். கட்டிடக் கலை ரீதியான கருத்தியல்களையும் சமயரீதியான தத்துவ விளக்கங்களையும் கொண்டு மிகப்பிரமாண்ட மான அமைப்பிலும் உயர்ந்த மதிநுட்பத்துடனும் பல கலைப்படைப் பம்சங்களுடனும் உருவாக்கப்பட்ட அவ்வாலயம் உலகக்கலை வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. சதுரமான தளத்தில் அமைக்கப்பட்ட அக்கட்டிடம் 112 மீற்றர் நீளமானது. கட்டிடத்தின் உட்பகுதியிலும் வெளிப்பகுதியிலும் புத்தரோடு தொடர் புடைய கதைகளை எடுத்துக் காட்டும் பாங்கினைக் காணலாம். இஸ்லாம் இந்நாட்டிற்குள் புகுந்த பின்னரும் கூட மதம் மாறிய இஸ்லாமியராலும் இவ்வாலயம் வழிபடப்பட்டமை.[23] அதன் பெருமைக்குச் சான்றாகும்.

### லாவோஸ்

இங்கு அமைக்கப்பட்ட சங்கத்தின் அமைப்பு தாய்லாந்தை ஒத்ததாகக் காணப்படுகின்றது. இங்கிருந்து பல துறவிகள் தாய்லாந்தில் கல்வி கற்பதற்காகச் சென்றதாகக் கூறப்படுகின்ளது.

### வியட்நாம்

தற்கால வியட்நாம் ஆரம்பகாலத்தில் பல சிறு இராச்சியங்களாக இருந்தது. நீண்டகாலம் சீனாவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தமையால் அதன் வடபகுதியில் சீனாவிலிருந்து பௌத்தமதத்தின் செல்வாக்கு ஏற்பட்டதாக கூறப்படுகின்றது. சீனாவிலிருந்து முதலில் பௌத்த துறவிகள் வியட்நாமுக்குள் வந்தாலும் கி.பி. 2ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் இந்தியாவிலிருந்தும் மத்தியாசியாவிலிருந்தும் கடல் மற்றும் தரை வழியாக பௌத்தர்கள் வியட்நாமுக்கு வருகை தந்தனர்.[24] தென் வியட்நாமின் தென்பகுதியில் அந்நியச் செல் வாக்கினால் மகாஜான பௌத்தமும் இந்து சமயமும் பக்கமாக செல்வாக்குப் பெற்றிருந்தன. ஆனால் 15ஆம் நூற்றாண்டளவில் வடக்கின் கட்டுப்

பாட்டுக்குள் தெற்கு உள்ளடக்கப்பட்டமையால் பௌத்தம் இப் பகுதியிலும் மேன்மை பெற்றது.

### இந்தோனேசியா மற்றும் மலேயத்தீபகற்பம்

கி.பி. 5ஆம் நூற்றாண்டளவில் இந்தியாவிலிருந்து சென்றவொரு பிக்கு மத்திய யாவாவிற்கு வந்து அதன் அரசியை மதம் மாற்றினார் எனக் கூறப்படுகின்றது. இராணி தான் பௌத்தத்திற்கு மதம் மாறியது மட்டுமன்றி அதனை அரசமதமாகவும் ஆக்கிக்கொடுத்திருந்தார்.

### பாலி

தற்காலத்திலே 98வீதமான இந்துக்களைக்கொண்டு விளங்கும் தென் கிழக்காசிய நாடான பாலித் தீவிலும் பௌத்தமதமானது குறிப்பிடத் தக்களவு சிறப்புப்பெற்றிருந்தது. சிறப்பாக பௌத்தமதக் கோட்பாடு களும் வரையறைகளும் இந்நாட்டு மக்களால் பின்பற்றப்பட்டதோடு அவை அழியாது பேணப்பட்டும் வந்தன. குறிப்பாக இங்கே வாழ்ந்த மக்கள் இந்துக்கள், பௌத்தர்கள் என்கின்ற வேறுபாடுகள் இன்றி பரஸ்பரம் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு உடையோராக காணப் பட்டார்கள். அத்தோடு சில விழாக்கள் இரண்டு மதத்தவர்களாலும் இங்கு பரஸ்பர புரிந்துணர்வுடன் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதைவிட இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலும் பௌத்த பண்பாடானது பரவி இருந்ததனை நாம் காணலாம். குறிப்பாக சமயம் கலைகள், வாழ்க்கை முறைகள் போன்றன தென்கிழக்காசிய மக்களால் பின்பற்றப்பட்டதை நாம் அவதானிக்கலாம். எனினும் சற்று பிற்பட்ட காலத்திலே குறிப்பாக மௌரியப் பேரரசின் வீழ்ச்சியுடன் முதலில் இந்துசமயமும் பின்னர் இஸ்லாமிய மதமும் ஆதிக்கம் பெறத்தொடங்கின. சிறப்பாக இஸ்லாமிய ஆதிக்கப் படர்ச்சியுடன் பௌத்த பண்பாடு செல்வாக்கு இழந்தபோதிலும் பர்மா, தாய்லாந்து, கம்போடியா போன்ற நாடுகளில் இன்னும் பௌத்த பண்பாடு வாழ்கிறது.

அந்த வகையிலே மேற்கூறப்பட்ட விடயங்களின் அடிப் படையிலே தொகுத்துக் கூறுகின்ற போது தென்கிழக்காசியாவிலே

பௌத்தப் பண்பாடானது நிலை பெற்றிருந்ததனை பல்வேறு சான்றுகளின் ஊடாக நாம் அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக அசோகன் காலத்திலே மகாமாத்திரர்; என்ற குழுவினரின் உதவியோடு இங்கு பௌத்தம் நிலைபெற வாயப்பு ஏற்பட்டது. கி.பி.முதலாம் நூற்றாண்டிலிருந்தே பர்மா, கம்போடியா, தாய்லாந்து, யாவா, இந்தோனேசியா உள்ளிட்ட பல நாடுகளிலும் பௌத்தப்பண்பாடானது பரப்பப்பட்டது. இதனை நாம் இலக்கிய ஆதாரங்கள், கல்வெட்டுக்கள், தொல்பொருட்சான்றுகள் மற்றும் இன்றும் நிலைபெற்றிருக்கக் கூடிய பௌத்தமதக்கட்டிடங்கள், பழக்க வழக்கங்கள் வாயிலாகவும் அறிந்து கொள்ளலாம். இதன் அடிப்படையிலே பிற்பட்ட காலங்களில் இஸ்லாமியரின் ஆதிக்கப் படர்ச்சியோடு பௌத்தப் பண்பாடுகள் சற்று செல்வாக்கிழந்தாலும் பர்மா, தாய்லாந்த உள்ளிட்ட நாடுகளில் இன்றும் அதிக செல்வாக்குகளுடன் பௌத்தபண்பாடுகள் நிலை பெற்றிருக்கின்றமையானது குறிப்பிடத்தக்கதாகும். அண்மைக் காலங்களில் தென்கிழக்காசிய நாடுகளின் சுதேசிய அம்சங்களின் மூலமான தனித்துவத்தை முதன்மைப்படுத்தும் நிலையை வலியுறுத்தினாலுங் கூட மேற்குறித்த காலப்பகுதியில் இந்தியப் பண்பாடு தென்கிழக்கிலுள்ள தீபகற்பம் மற்றும் தீவுக் கூட்டங்களில் மிகப் பெரியளவிலான செல்வாக்கினை நிலை நிறுத்திக் கொண்டமைக்கு தொல்லியற் சான்றுகள் கிடைக்கப் பெறுகின்றமை முக்கியத்துவ முடையதாகும்.

## அடிக்குறிப்பு

1. சர்மா, ஆர்.எஸ்., பண்டைக்கால இந்தியா *(தமிழ் மொழிபெயர்ப்பு)*, நியூ செஞ்சுரி புக் கவுஸ், 2001, பப. 387-388.
2. வாழ்வியற்களஞ்சியம், தொகுதி. 12, பக்.16.
3. சர்மா, ஆர்.எஸ்., மே.க.நூல், ப.385.
4. கிருஷ்ணராஜா, செ., 'இந்திய தென்கிழக்காசிய தொடர்புகளும் இந்தியப் பண்பாடு பற்றிய சில பிரச்சினைகளும்: ஒரு வரலாற்றுக் குறிப்பு', சிந்தனை, தொகுதி 1, இதழ் 1, பங்குனி 1990, ப.9.
5. Rao M., Bandy J.S., Mistra B.N. (Ed.), *Indias Cultural Realationship with Southeast Asia*, Sharada Publishing House, 1996, p.20.
6. *Asoka the Geart*, B.R.Publishing Corporation, 1945, p. 90.

7. எமது கலாசார பாரம்பரியம், *ப. 201.*
8. *பார்த்தசாரதி, திருமதி,* பர்மா, அருணோதயம் வெளியீடு, சென்னை, *1960, ப.86.*
9. Rao M., et al, *ibid*, p.102.
10. எமது கலாசார பாரம்பரியம், *ப. 202.*
11. மே.க.நூல், *ப. 201.*
12. *பாலசுப்பிரமணியன், மா.,* சோழர்களின் அரசியல் கலாசார வரலாறு, *பாகம் 11, தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம், 1979, ப.288.*
13. Mistra B.N., et al, *ibid*, P.109.
14. buddism.net.
15. *பார்த்தசாரதி, திருமதி,* மே.க.நூல், *பக்.102- 105.*
16. மே.க.நூல், *ப.86.*
17. Mistra B.N., et al, *ibid*, P.109.
18. buddism.net.
19. 'Buddhism in Southeast Asia' from *wikipediya.*
20. Antony Bernard, 'Combodia will Never Disapper', *Art of Asia*, p.103.
21. Marcello Ranchini., Borobadur – Art & Religion, *Arts of Asia*, p.80.
22. *ibid.*, p.80.
23. *ibid.*, p.82.
24. buddisum.Net.